செ.வெ.எண் : 03 நாள் : 03.02.2021

**கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.**

***************

**கோயம்புத்தூர் மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்-2021 நடத்தப்படுவது தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடுப் பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்ஆலோசனைக்கூட்டத்தில் மாநகர காவல் ஆணையாளர் திரு.சுமித்சரன் இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளரசு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, பொள்ளாச்சி சார் ஆட்சியர் திரு.வைத்திலிங்கம்,இ.ஆ.ப., மாநகர காவல் துணை ஆணையாளர் திரு.ஸ்டாலின், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.சிவக்குமார், உள்ளிட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.**

**பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது,**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்கள், 2021 நடத்தப்படுவதற்கான தேதிகள் முடிவு செய்யப்பட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தால் அட்டவணை தயார் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி கோயம்புத்தூர்

மாவட்டத்தில் பொது மக்கள், அரசியல் கட்சிகள், அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான நடத்தை விதிகள் உடனடியாக அமுலுக்கு வருகிறது.

பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சியினர் பேனர்கள், போஸ்டர்கள், சுவர் விளம்பரங்கள் ஆகியவை அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அகற்றப்பட்டுள்ளது. பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சியினர் கொடிக் கம்பங்கள் அகற்றப்பட்டுள்ளதுடன், அரசியல் கட்சித் தலைவர்களின் சிலைகள் மற்றும் சின்னங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகள் மீறப்படுவது தொடர்பாக பொதுமக்கள் தங்கள் புகார்களை 24 மணி நேரமும் தெரிவிக்கும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, சுழற்சி முறையில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள். தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800-425-4757 மற்றும் 1970 ஆகும். தற்போது வரை தேர்தல் நடத்தை விதி தொடர்பாக 15 புகார்கள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. மேலும் பெறப்படும் முறையான அனைத்து புகாரின்பேரிலும், எவ்வித பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுபோலவே, கோவை மாவட்டத்தில் செலவினக் கண்காணிப்புக்காக 30 பறக்கும் படை குழுக்கள், 30 நிலையான கண்காணிப்புக் குழுக்கள், 20 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் உடனடியாக களத்தில் பணியாற்றி வருகின்றனர். மேலும் தேர்தல் ஆணையத்தால் கொண்டு வரப்பட்ட cVigil அலைப்பேசி செயலி மூலம் புகார்களை பொதுமக்கள், வீடியோ அல்லது புகைப்படம் மூலம் பதிவு செய்து பதிவேற்றம் செய்யலாம். இப்புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது வரை வாக்காளர் பட்டியலில் பதிவு இல்லாத/விடுபட்ட பொது மக்கள் தங்களது பெயர்களை பட்டியலில் சேர்க்க www.nvsp.in

எனும் இணையதளம் மூலமாகவோ அல்லது படிவம் 6 மூலமாக நேரிலோ வட்டாட்சியர் அலுவலகங்களிலும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும், கோவை மாநகராட்சி மத்திய மற்றும் கிழக்கு மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களிலும் விண்ணப்பம் செய்யலாம்.

கோவை மாவட்டத்தில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 3048 வாக்குச் சாவடிகள் இருந்தன. தற்போதுள்ள கொரோனா தொற்றின் காரணமாக சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டி பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக 1050 வாக்காளர்களுக்கும் அதிகமாக உள்ள வாக்குச் சாவடிகள் இரண்டாக பிரிக்கப்பட்டு புதிதாக 1379 துணை வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 976 பகுதிகளில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் தற்போது புதியதாக ஏற்படுத்தப்பட்ட வாக்குச்சாவடிகளின் மூலம் 106 பகுதிகளில் புதிய வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் 112 மையங்களில் உள்ள 788 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் வாக்குப் பதிவு நடக்கும் சமயத்தில் கொரோனாவால் பாதிப்படைந்துள்ள அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் வாக்காளர்கள், அவர்களின் விருப்பத்தின் பேரில், தங்கள் வாக்குகளை தபால் வாக்குகளாக செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட குழுக்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு தொகுதியில் உள்ள அத்தகைய வாக்காளர்கள் எண்ணிக்கை அடிப்படையில் இக்குழுக்கள் அமைக்கப்படும். எதிர்வரும் 16.03.2021-க்குள், அதாவது தேர்தல் நடத்தும் அலுவலர்களால் அறிவிப்பு வெளியிடப்படும் நாளான 12.03.2021 அன்றிலிருந்து 5 நாட்களுக்குள், வாக்காளர்கள் தபால் வாக்கு பெறுவதற்காக படிவம் 12D பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது வாக்குச் சாவடி அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுமார் 64,650 மூத்த வாக்காளர்களும், 20,000 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும் உள்ளனர். இதுதவிரவும், தேர்தல் நாளன்று வாக்களிக்க வருகை தரும் மூத்த வாக்காளர்களுக்கும், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கும் வாக்குச் சாவடிகளில் தேவையான சாய்தளம், வீல் சேர், உதவியாளர் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்கள், அரசு அலுவலர்கள் என அனைவரும் தேர்தல் நடத்தை விதிகளை முறையாக பின்பற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர்.**